வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 10.09.2025 புதன்கிழமை இதழ் : 253 பக்கங்கள் : 08

ஐ. நா. தீர்மானத்தின்மீதான

# வாக்கெடுப்பில் இருந்து விலகவுள்ளது இலங்கை?

- கொள்கையளவில் வெளியக பொறிமுறைக்கு எதிரானது என்றாலும் சமரசமான அணுகுமுறை
- தேவைப்பட்டால் சர்வதேச சமூகத்தின் தொழில்நுட்ப ஆதரவை ஏற்க தயார்!

ஜெனிவா, செப்ரெம்பர் 10

**இலங்கையின் பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் பிரச்னைகள் தொடர்பில் ஒரு பொறிமுறையை கோரி, பிரிட்டன் தலைமையிலான நாடுகளின் முக்கிய குழு இந்த மாத இறுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அதன் முன்மொழியப்பட்ட தீர்மானத்தை முன்வைக்கும்போது, வாக்கெடுப்பு கோருவதில்லை என்று இலங்கை முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

கனடா, மலாவி, மொண்டினீக்ரோ மற்றும் வடக்கு மசிடோனியா ஆகியவை முக்கிய குழுவில் உள்ள மற்ற உறுப்பு நாடுகள் ஆகும்.

இலங்கை இந்த ஆண்டு ஒரு புதிய தீர்மானத்தை எதிர்கொள்கிறது. அரசாங்கத்தின் சார்பாக, வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் நேற்று முன் தினம் ஜெனிவாவில் ஓர் அறிக்கையை வெளியிட்டார், இலங்கை உள்நாட்டு பொறிமுறையின் மூலம் பிரச்னைகளுக்கு

07

## அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு அவசியம்; மாகாண தேர்தலை உடனடியாக நடத்துக

### இந்தியா இலங்கையிடம் வலியுறுத்து

ஜெனிவா, செப். 10

நாட்டின் அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், மாகாண சபைகள் தேர்தல்களை உடனடியாக நடத்துதல் மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளல் என்பவற்றுக்கு நடவடிக்கை எடுக்குமாறு ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை வலியுறுத்திய இந்தியா, சகலரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் நியாயமான நல்லிணக்க செயன்முறை என்பன நிலையான அமைதிக்கு வழிகோலும் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித

07

## ஐ.நா மனித உரிமைகள் பேரவை பக்கச்சார்பின்றி நடக்கவேண்டும்

### இலங்கைக்கு ஆதரவாக பாகிஸ்தான், லாவோஸ், எரித்ரியா

ஜெனிவா, செப். 10

ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது பக்கச்சார்பின்றி நியாயத்துவத்தின் அடிப்படையில் செயற்படவேண்டும் என பேரவையில் வலியுறுத்திய பாகிஸ்தான், லாவோஸ், எரித்திரியா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள், இலங்கையின் உள்ளக செயன்முறைகளைத் தாம் ஆதரிப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்

07

## உலக வங்கியிடம் 100 மில். டொலர் கடன் பெறும் இலங்கை!

கொழும்பு, செப். 10

ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தி மற்றும் காலநிலை நெகிழ்ச்சி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியளிப்பதற்காக உலக வங்கிக் குழுமத்திடம் இருந்து 100

07

## இலங்கை பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் பின்னடைவு

ஜெனிவா, செப். 10

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளடங்கலாகக் கடந்தகால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் பின்னடைவு நிலை தொடர்வதாக ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் அதிருப்தி வெளியிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், பொறுப்புக்கூறலே சட்டவாட்சியின் மையப்புள்ளி எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை மீதான விவாதத்தின்போது

07

# இலங்கையின் மனிதப் புதைகுழிகள் சர்வதேச விசாரணை அவசியமானது

### ஐ. நாவுக்கான பிரிட்டன் பிரதிநிதி குமார் ஐயர் ஜெனிவாவில் வலியுறுத்து

ஜெனிவா, செப். 10



**இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச தரத்திலான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஐக்கிய நாடுகளுக்கான பிரிட்டனின் நிரந்தரப் பிரதிநிதி குமார் ஐயர் வலியுறுத்தியுள்ளார்.**

ஐக்கிய நாடுகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை தொடர்பான குழுநிலை விவாதத்துக்காகக் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நீடித்த சவால்கள் மற்றும் சீர்திருத்தத்திற்கான வாய்ப்புகள் ஆகிய இரண்டையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் அடிக்கோடிட்டு காட்டியமைக்கு இதன்போது குமார் ஐயர் தனது நன்றியைப் பகிர்ந்துள்ளார்.

சட்டவிரோத கொலைகள், கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படுதல், பாலியல் மற்றும்

07

## ஹெரோயின், ஐஸ்டன் யாழில் நால்வர் கைது!

யாழ்ப்பாணம், செப். 10

குருநகர் பகுதியில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களுடன் 18 வயது இளைஞன் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குருநகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 110 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடனும் , 30 மில்லிகிராம்

07

## கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு முறையாக காணி உறுதி வழங்குக

### அரசிடம் கோருகிறார் சிறிதரன் எம். பி.



கொழும்பு, செப். 10

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களுக்கு முறையாக காணி அறுதி உறுதி பத்திரங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கு மாகாணத்தில் விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு உடன் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின் போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது,

07

## சட்டவிரோத மீன்பிடி செயல்பாடுகள் உடன் கட்டுப்படுத்தப்படவேண்டும்!

### ரவிகரன் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, செப். 10.

வட பகுதிக் கடற்பரப்பில் தலைவிரித்தாடும் சட்டவிரோத கடற்றொழில் செயல்பாடுகள் உடனடியாகக் கட்டுப்படுத்தப் படவேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் குறித்த சட்டவிரோத செயற்பாடுகள் எதிர்வரும் டிசெம்பர் மாத இறுதிப் பகுதிக்குள் முற்றாக கட்டுப்படுத்தப்படுமென கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் பிரதி அமைச்சர் ரத்ன கமகே ஆகியோரால் பதில் வழங்கப் பட்டுள்ளது.

07

## கே. பி. குறித்து பொன்சேகா வெளியிட்ட புதிய தகவல்கள்



கொழும்பு, செப். 10

மலேசியா பொலிஸாரே கே. பியை கைது செய்தனர் எனவும் இலங்கைக்கு கொண்டுவரப்படும்வரை அவர் கே.பி. என்பது எமக்கு தெரியாது எனவும் முன்னாள் இராணுவ தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.


கோட்டாபய ராஜபக்ஷ கே.பியை வீட்டுக்கு

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீன்பிடித்துறை அதிகாரிகள் வடக்கு மாகாண ஆளுநருடன் பேச்சு



யாழ்ப்பாணம், செப். 10

பருத்தித்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராய, யாழ். வந்துள்ள இந்தியாவின் மீன்பிடித்துறை அமைச்சின் கீழ் இயங்கும் மீன்வளத்துக்கான மத்திய கடலோர பொறியியல் நிறுவனத்தினர் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளியும் பங்கேற்றிருந்தார்.

இலங்கை - இந்திய அரசாங்கங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் பருத்தித்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த சந்திப்பில் மீன்வளத்துக்கான மத்திய கடலோர பொறியியல் நிறுவனத்தின் இயக்குநர் தமது தொழில்நுட்ப மதிப்பீடு தொடர்பான விடயங்களை முன்வைத்தார். கடந்த காலங்களில் இந்தத் திட்டத்துக்காக தயாரிக்கப்பட்ட வடிவமைப்பு அதிலிருந்து தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ள சில விடயங்கள் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

இதேவேளை, இலங்கை மீன்பிடி அமைச்சிலிருந்து இந்தத் திட்டம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கரிசனை தொடர்பிலும் அவர் கூடுதல் கவனம் செலுத்தினார். மேலும் திட்டத்துடன் தொடர்புடைய திணைக்களங்களிமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டிய அனுமதிகள் தொடர்பாகவும்,

கடந்த காலங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதிகளை புதுப்பித்துக் கொள்வது தொடர்பாகவும் அவர் கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

பருத்தித்துறை துறைமுகத்தை நேரில் சென்று பார்வையிடவுள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை கடற்றொழில் அமைச்சரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பருத்தித்துறை துறைமுகத்துடன் தொடர்புடைய சமூக அமைப்புக்களின் கருத்துக்களை உள்வாங்கி எதிர்கால திட்டங்களை முன்னெடுக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், இந்தியத் தூதுக் குழுவினர், கடற்றொழில் அமைச்சு அதிகாரிகள் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர். (அ)

# பிள்ளைகளது அடிப்படை உரிமைகளையும் உறுதிப்படுத்தவேண்டியது எமது பொறுப்பு!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், செப். 10

வடக்கிலுள்ள ஒவ்வொரு பிள்ளைகளினதும் அடிப்படை உரிமைகளையும் அவர்களது தேவைகளையும் வசதிகளையும் உறுதிப்படுத்தவேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இந்தியத் துணைத்தூதரகமும், போலோ ஆய்வகமும் இணைந்து, யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் "போசாக்கு ஊட்டச்சத்து ஆரோக்கியம் மற்றும் ஆரம்பகால கற்றல் குறித்த உலகளாவிய கருத்தரங்கு - ஒரு குழந்தையின் எதிர்காலத்துக்கான இணைப்பு" என்னும் தலைப்பில் நேற்று நடத்திய கருத்தரங்கில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து வருகை தந்த கல்வி உளவியாளரும் சிறுவர் உரிமைக்கான நிபுணருமான சரண்யா ஜெய்குமார் தலைமையில் குறித்த கருத்தரங்கு நடைபெற்றது.

யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் ஆகியோரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், தேசியக் கல்வியற் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (அ)

# தானியங்கி நுண் நீர்ப்பாசன கத்தரிச் செய்கை அறுவடை

கிளிநொச்சி, செப். 10

விவசாய பீடத்தின் சேவையை சமூகத்திற்கு வழங்கும் பொருட்டு, யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீட சமுதாய மேம்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில், தானியங்கி நுண் நீர்ப்பாசனத்தில் செய்கை பண்ணப்பட்ட கத்தரிச் செய்கையின் அறுவடை விழா நேற்று கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் உள்ள, கோவிப்பிரியன் விவசாயின் வயலில் இடம்பெற்றது.

விவசாய பீட பீடாதிபதி க. பகீரதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக ஜப்பான் நாட்டு பேராசிரியர் ரோறு ரமிரஸ்னாகா, இரணைமடு கமக்காரர் அமைப்புகளின் சம்மேளன தலைவர் சி.சிவமோகன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில், விரிவுரையாளர்கள், விவசாய பீட பண்ணை முகாமையாளர், கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் என பலர் பங்கேற்றனர். (அ)

# உரும்பிராயில் விபத்து; ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 10

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பலாலி வீதி, உரும்பிராய் கற்பக பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையில் நேற்று விபத்து சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளும், காரும் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் மற்றும் கார் என்பன பகுதியளவில் சேதமடைந்தது டன், மோட்டார் சைக்கிளில் சென்றவர் சிறிய காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# காற்றாலைக்கு எதிரான போராட்டத்தில் காலிமுகத்திடல் போராட்டக் குழுவினர்

மன்னார், செப். 10

மன்னார் காற்றாலைக்கு எதிராக, 38ஆவது நாளாக போராட்டம் தொடரும் நிலையில், ஜனாதிபதி அனுர குமார திஸநாயக்க, காற்றாலைக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால், எதிர்வரும் 19ஆம் திகதி, ஜனாதிபதி செயலகம் முன்பாக போராட்டம் நடத்தப்படும் என காலிமுகத்திடல் போராட்ட அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக நேற்று 38ஆவது நாளாக தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்ட இளையோர்கள் மற்றும் மக்கள் தொடர்ச்சியாக குறித்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டத்திற்கு நாளாந்தம் ஒவ்வொரு கிராமங்களையும் சேரந்த மக்களும், வர்த்தகர்களும் உள்ளடங்கலாக, அனைத்து தரப்பினரும் தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகின்றனர்.

அதற்கமைய நேற்று மன்னார் மாவட்ட சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கத்தினர் முழுமையாக கடைகளை மூடி, போராட்டத்தில் பங்கேற்றனர்.

அத்துடன் கொழும்பு காலிமுகத்திடல் போராட்டத்தை முன்னின்று நடத்திய அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் மற்றும் காலிமுகத்திடல் போராட்டக் குழுவினர், பௌத்த மதகுரு ஆகியோர் கொழும்பிலிருந்து வருகை தந்து போராட்டத்தில் பங்கேற்றனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், மக்களின் போராட்டத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும், எதிர்வரும் 19ஆம் திகதி, ஜனாதிபதி செயலகம் முன்பாக, பிற்பகல் 2.00 மணிக்கு பெரும் போராட்டம் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார். (அ)

# கிளிநொச்சி மருத்துவமனையில் சிரமதானம்

கிளிநொச்சி, செப். 10

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினரால், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 13 ஆண்டு நிறைவை முன்னிட்டு, திணைக்கள உத்தியோகத்தர்களால் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அவர்களுடன் வைத்தியசாலையின் பணியாளர்களும் இணைந்து சிரமதானத்தை மேற்கொண்டனர். (அ)

# ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் சட்டமூல விவாதம் இன்று சபையில்

கொழும்பு, செப். 10

ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்புமீதான பாராளுமன்ற விவாதத்தை இன்று நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று முற் பகல் 11.30 முதல் பிற்பகல் 3.30 வரை இந்த விவாதம் நடக்கவுள்ளது.

சபாநாயகர் தலைமையில் நேற்று நடைபெற்ற பாராளுமன்ற விவகாரக் குழுவில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனிடையே, ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் சட்டமூலத்தின் எந்தவொரு விதியும் அரசியலமைப்பின் எந்தவொரு விதிக்கும் முரணானது அல்ல என்றும் பாராளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியுமெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் நேற்று பாராளுமன்றில் அறிவித்தார்.

# கச்சதீவு சுற்றுலா மையமாக்க வேண்டும்

## சிவ சேனை அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 10

கச்சதீவைச் சுற்றுலா மையமாக்க வேண்டும். இதன் மூலம் வடக்கு வளம் கொழிக்கும். கச்சதீவு சைவத் தமிழர்களின் பூமி என்று சிவ சேனை அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் பாலசிங்கம் செயமாறன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கச்சதீவை சுற்றுலா மையம் ஆக்காதே, மாற்று ஆற்றல் காற்றாலை நிறுவாதே, மாற்று ஆற்றல் சூரிய ஒளி நிறுவாதே, கனிம வளத்தை எடுக்காதே, அரசு சார்பற்ற நிறுவனங்களுக்குக் கோடி கோடியாய் கொட்டி பொது மக்களை விலைக்கு வாங்கித் தேவையற்ற போராட்டங்களை [illegible] மாகாண ஆட்சி [illegible] நடுவண் அரசுக்கு தாரை வார்.

வடக்கே சுற்றுலா பயணிகள் வரவே கூடாது இதுவே யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் இறை உணர்வு கொள்கை. நாகர்கள் சிவன் கோயில் அமைத்து வழிபட்ட திருத் தீவு கச்ச தீவு. பரதவர்கள் காளி கோயில் அமைத்து வழிபட்ட கச்ச தீவு. காளியாத்தா தந்த கடல் வாழ்வு என வாழ்ந்த தமிழரின் தீவு கச்ச தீவு.

கச்ச தீவில் சைவர்களுக்கு உள்ள உரிமைகளைப் பறங்கிகளின் எச்சங்கள் பறித்தெடுக்க முயல்கிறார்கள். நூறாண்டுகளே பழமையான சிறிய அந்தோனியார் தேவாலயத்துக்காக கச்ச தீவு முழுவதும் சுற்றுலா மையமாக்கக்கூடாது என்று கொக்கரிப்போர் கத்தோலிக்க ஆக்கிரமிப்பாளரின் எச்சங்கள்.

இலங்கை முழுவதும் மாற்று ஆற்றல் காற்றாலை நிலையங்கள் பற்பல. இலங்கையை வளமாக்கும் நிலையங்கள். மன்னாருக்கு வரக்கூடாதாம். மன்னார் ஆயர் முடக்குகிறார் வடக்கின் வளர்ச்சியை. கச்ச தீவின் கடற்கரையும் சுற்றியுள்ள தெளிந்த கண்ணாடி போன்ற நீரும் சுழியோடிகளின் சொர்க்கம். கச்ச தீவு சுற்றுலா மையமானால் வடக்கு வளம் கொழிக்கும்.

கச்சதீவைச் சுற்றுலா மையமாக்குக. யாழ்ப்பாணச் சைவத் தமிழ் மக்களின் பொருண்மிய வளத்தை பெருக்குக. புதிய முதலீடுகளை ஈர்க்க. புதிய தொழில்நுட்பங்களை புகுத்துக. புதிய வாழ்வியலை நோக்கியே சைவத் தமிழ் மக்கள் வளர விரும்புகிறோம் - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
10.09.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வெளித் தலையீடுகள் வேண்டும் - வேண்டாம்?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் வெளியாரின் தலையீடுகள் நல்லிணக்க முயற்சிகளைத் தடுப்பதற்கும் மற்றும் இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்துவதற்கும்தான் அவ்வாறான தலையீடுகள் பயன்படுமென்று குறிப்பிட்டு, எந்தவொரு வெளித்தலையீடுகளும் தேவையற்றவை என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார். தமிழ் தரப்புகள் சர்வதேச விசாரணை என்பதை அழுத்திக் குறிப்பிட்டுவரும் சூழலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதனைஅடியோடு நிராகரித்திருக்கிறது. இதன்மூலம் எந்தவொரு வெளித்தலையீடுகளையும் ஏற்றுக் கொள்வதில்லை என்னும் கொள்கையை ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்வைத்திருக்கிறது. தமிழ் கட்சிகள் இப்போது என்ன செய்யப் போகின்றன?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் உரையிலும் தற்போதுள்ள சூழலை ஒரு வரலாற்று வாய்ப்பு என்றும் இதனை பயன்படுத்தி நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதுள்ள பிரச்னையைத் தீர்க்கவேண்டும் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒருவகையில் நோக்கினால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வாதத்தை மறைமுகமாக அங்கீகரிப்பதாகவே தெரிகிறது.

இலங்கைக்கு விஜயம் செய்தபோதும்கூட,பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை சந்தித்தபோது, உள்ளகப் பொறிமுறையை வலியுறுத்தியதாகவே குறிப்பிட்டிருந்தார். இத்தனைக்கும் செம்மணி பகுதிக்குச் சென்று பூக்களைத் தூவியபின்னரும்கூட, உள்ளகப் பொறிமுறையையே அவர் வலியுறுத்தியிருக்கிறார் என்னும்போது நிலைமைகளைப் புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும்.

இதற்கு பின்னரும்கூட நிலைமைகள் புரியவில்லையாயின், உண்மையில் நித்திரையில்லை மாறாக நித்திரை போன்று நடிக்கும் செயலாகவே அதனை நோக்கலாம். இதற்கிடையில் கடிதங்கள் எழுதுவதிலும் போட்டியேற்பட்டது – அந்தக் கடிதத்தை சிறப்பாக எழுதவில்லை என்றுவேறு பட்டிமன்றங்கள் நடந்தன. ஆனால், அரசாங்கம் அதன் நிலைப்பாட்டை திட்டவட்டமாக முன்வைத்திருக்கிறது. அதாவது வெளித்தலையீடுகள் இல்லை - இதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

இதற்குப் பின்னர் வேறுவிவாதங்கள் செய்வதில் பயனில்லை. கடிதங்கள் எழுதுவதோ, கூட்டங்கள் நடத்துவதோ வெளித் தலையீடுகளை கொண்டுவராது என்பதுதான் உண்மை. அவ்வாறாயின் வேறு என்ன செய்தால் வெளியாரின் தலையீடு நிகழும் – நிச்சயம் எதனை செய்தாலும் அது நிகழாது. அவ்வாறாயின், முதலில் உள்நாட்டுப் பொறிமுறையின் கீழ் விடயங்களை முன்னெடுங்கள் என்று கூறி, பொறுப்பை அரசாங்கத்தின்மீது சுமத்தி விட்ட விடயங்களை அவதானிப்பதுதான் சரியானது. உள்நாட்டுப் பொறிமுறையை அரசாங்கம் முன்னெடுக்க முடியாமல் இருக்கும் இடத்தில்தான் ஐ. நாவின் ஆலோசனையைக் கோரவேண்டும். இதனை ஓர் உபாயமாக தமிழ் கட்சிகள் கைக்கொள்ள முடியும். இல்லாவிட்டால் வெளித் தலையீடுகள் வேண்டும் மற்றும் வேண்டாம் என்னும் அடிப்படையிலேயே இந்த விடயம் எவ்வித முன்னேற்றமும் இன்றி நகர்ந்து கொண்டிருக்கும். இவ்வாறு நகர்வதால் அரசாங்கத்துக்கு எவ்வித சிக்கலும் இல்லை.

# வழக்கு விசாரணைக்காக நீதிமன்றுக்கு சென்றவர் மீது நேற்று துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, செப். 10

காலி, பலப்பிட்டிய, பெட்டிவத்த பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கு விசாரணைக்காக முச்சக்கரவண்டியில் நீதிமன்றத்துக்கு சென்றுக்கொண்டிருந்த நபர் மீதே இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் முச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்த நபரொருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் தம்மிக்க நிரோஷன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பிரதான துப்பாக்கிதாரி என சந்தேகிக்கப்படும் நபரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

இவர் வழக்கு விசாரணைக்காக முச்சக்கர வண்டியில் நீதிமன்றத்துக்கு சென்றுகொண்டிருக்கும்போது இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சக்திமிக்க போதைப்பொருள் கடத்தல்காரருடன் தொடர்புள்ள நபர் 2 கோடி ரூபாயுடன் கைது

கொழும்பு, செப். 10

வாகனங்களை விற்பனை செய்யும் தொழிலதிபராகத் தன்னை அடையாளம் காட்டி, வெளிநாட்டில் வசிக்கும் திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடும் மற்றும் சக்திவாய்ந்த போதைப்பொருள் கடத்தல்காரருக்குக் காசாளராகச் செயல்பட்ட நபரொருவர் 20 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பணம் மற்றும் போலியான வாகன இலக்கத்தகடுகள் ஆகியவற்றுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் 2 கோடி 20 இலட்சம் ரூபா பணம் பணத்தை எண்ணப் பயன்படுத்தப்படும் நவீன இயந்திரம், சில குற்றங்களுக்குப் பயன்படுத்துவதற்காகப் போலியாகத் தயாரிக்கப்பட்டு மறைத்து வைக்கப்பட்ட 20 வாகன இலக்கத் தகடுகள், 21 வருமான உரிமங்கள், 05 காப்பீட்டுச் சான்றிதழ்கள், 9 மி.மீ. தோட்டா ஒன்று மற்றும் 12020 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் ஆகியவற்றுடன் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி கபில காரியவசம் தலைமையிலான அதிகாரிகள் குழு, வெளிநாட்டில் வசிக்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் சக்திவாய்ந்த போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரைப் பற்றிய நீண்ட விசாரணையின் போது, அவரது காசாளராகச் செயல்பட்ட சந்தேக நபர், வத்தளை, ஹுனுபிட்டியவின் கெமுனு மாவத்தை பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வசித்து வருவதும், போதைப் பொருள் கடத்தல்காரரின் பணத்தின் பாதுகாவலராகச் செயல்பட்டு வருவதும் கண்டுபிடிக்கப்பட்டது.

வாகன விற்பனையாளராகக் காட்டிக் கொள்ளும் சந்தேக நபர், நீண்ட காலமாகப் போதைப்பொருள் கடத்தல்காரரின் பணத்தின் பாதுகாவலராகச் செயல்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபரின் வீட்டின் அலுமாரியில் பணம் மற்றும் பிற சொத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கார் ஆகியவற்றுக்கான இலக்கத்தகடுகள், காப்பீட்டுச் சான்றிதழ்கள் மற்றும் வருமானச் சான்றிதழ்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் இருக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியின் அறிவுறுத்தலில் சந்தேக நபர் இவற்றைப் போலியாக உருவாக்கி, பல்வேறு நபர்களுக்குக் குற்றச் செயல்களுக்காக வழங்குவதற்காகத் தனது வசம் வைத்திருந்ததாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# வேப்ப மரங்கள் தறிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், செப். 10

வடமராட்சி அல்வாய் கிழக்கு பகுதியில் வீதி அமைத்தல் பணிகளுக்காக தனியாருக்கு சொந்தமான காணிகளிலிருந்த மூன்று வேப்ப மரங்கள் தறிக்கப்பட்டமைக்கு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.


ஒவ்வொரு மாரி காலங்களிலும் மண்ணரிப்பு ஏற்படுவதாகவும் இதனால் தமது காணி வேலிகளை வருடாந்தம் பின்னோக்கி நகர்த்த வேண்டியுள்ளதாகவும் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இது தொடர்பாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உப தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோரை தொடர்பு கொண்டு கேட்டபோது, அது பிரதேச சபைக்கு சொந்தமான வீதி எனவும் வீதி ஓரங்களிலுள்ள மரங்களை அகற்றுவதற்கு சபைக்கு அதிகாரம் உண்டு என தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

குடும்பத்தில் விட்டு கொடுத்து போவது நல்லது. வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**

குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள். புகழ் கௌரவம் கூடும்.

**மிதுனம்**

எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவை பெறுவீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**கடகம்**

கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். நேர்மறை சிந்தனை பெருகும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**சிம்மம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

**கன்னி**

பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**துலாம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். மனதிற்கு இதமான செய்திகள் வரும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். சாதிக்கும் நாள்.

**விருச்சிகம்**

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உங்கள் திறமைகள் வெளிப்படும். நினைத்தது நிறைவேறும்.

**தனுசு**

திட்டமிட்ட வேலைகள் தடையின்றி முடியும். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**மகரம்**

துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பர்.

**கும்பம்**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**மீனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

# போதைப்பொருள் பாவனை, விற்பனை ஐந்து வருடத்தில் முற்றாக ஒழிக்கப்படும்

**ஜெகதீஸ்வரன் எம். பி. தெரிவிப்பு**

வவுனியா, செப். 10

போதைப்பொருள் பாவனை, விற்பனை போன்றவற்றை ஐந்து வருடத்தில் முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"போதைப்பொருள் தடுப்பு தொடர்பான ஆரம்ப கட்ட விசாரணையின் போது அரசியல்வாதிகளும் கடந்த காலத்திலே ஆட்சிபுரிந்த அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வருகின்றன. இதே வேளை, கடந்த கால அரசாங்கத்துடன் தொடர்புபட்ட முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் சிக்கியுள்ளார்.

அந்தவகையில் கடந்த காலங்களிலே போதைப்பொருள் பாவனை இந்த நாடு முழுவதும் வியாபித்திருந்தது மட்டுமல்லாது அரசாங்கத்தினுடைய அனுசரணையுடனோ அல்லது குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளினுடைய ஒத்துழைப்போடு நடந்திருப்பதற்கான வாய்ப்புள்ளது.

இதேவேளை இளைஞர் - யுவதிகள் தங்கள் வாழ்க்கையை தொலைத்ததுடன், எதிர்காலத்தை இழக்கும் நிலைக்கு இவ் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியிருந்தனர். குறிப்பாக வடக்கு - கிழக்கு பகுதிகளில் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இது எதிர்கால சந்ததியினருக்கும், எதிர்கால இலங்கைக்கும் இருள்மயமான சூழலை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில், எமது அரசாங்கம் இது தொடர்பான விசாரணையை முன்னெடுத்துள்ளது. அந்த வகையிலே இதில் யார் ஈடுபட்டிருந்தாலும் அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி அது யாராக இருந்தாலும் சரி நாங்கள் கவலைப்படப் போவதில்லை என்பதோடு சரியான விசாரணை மற்றும் சாட்சியங்களோடு நிரூபிக்கப்படுபவர்களை நிச்சயமாக சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கான தண்டனையை வழங்குவோம்"- என்றார். (எ-10)

# வாழ்வகத்தில் கலாநிதி அன்னலட்சுமி நினைவுநாளும் நினைவுப் பேருரையும்

யாழ்ப்பாணம், செப். 10

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவுநாளும் நினைவுப் பேருரையும் சுன்னாகத்தில் உள்ள வாழ்வகம் - செல்லா மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 08. 45 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

வாழ்வகம் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொள்வார், சிறப்பு விருந்தினர்களாக வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஸ், யாழ்ப்பாணம் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சுப்பிரமணியம் வரதபாஸ்கரன், செல்வா ஹாட்வெயார் உரிமையாளர் தோமஸ் ராஜரட்ணம் கிறிஸ்ரி செல்வராஜன், சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். எவ். எம். பிரடவுஸ் ஆகியோர் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர், கலாநிதி ஆறு. திருமுருகன் பங்கேற்பார். நினைவுப் பேருரையை "செயற்கை நுண்ணறிவின் யுகம்: இயந்திரத்திலிருந்து மனித சிந்தனையின் பாதையில்" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி திருமதி டிலோஜினி சங்கரதாஸ் நிகழ்த்துவார். (எ)

# யாழ்ப்பாணத்தில் இளைஞன் மீது வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலட்டி பகுதியில் இளைஞன் ஒருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10. 00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இளைஞன்மீது ஹைஏஸ் வாகனத்தில் வந்த இருவர் வாள் வெட்டு தாக்குதலை மேற் கொண்டு விட்டு தப்பிச் சென் றுள்ளனர்

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த யாழ். கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 35 வயது இளைஞன் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்

இரு தரப்புக்கு இடையே காணப்பட்ட முன்பகையே வாள் வெட்டு சம்பவத்துக்கு காரணமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# புராண இதிகாச பாடசாலையில் புதிய இலவச கலை வகுப்புகள்

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நீர்வைக் கந்தன் புராண இதிகாச பாடசாலையில் சரஸ்வதி பூஜை விஷேட நன்னாளில் புதிய கலை வகுப்புகளான சங்கீதம், வயலின், மிருதங்கம் ஆகிய வகுப்புகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03. 00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்த நிகழ்வு கோவில் பிரதமகுரு ஸ்கந்தகுரு ஞானபானு சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் திருமுன்னிலையில் கோவில் பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. வாழ்த்துரையை சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கமும் கோவில் முன்னாள் பரிபாலன சபைத் தலைவர் த. நடராஜாவும் நிகழ்த்துவர்.

இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளவிரும்பும் மாணவர்கள் தங்கள் பதிவை எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீர்வேலி சிறீ முருகன் அறநெறிப்பாடசாலையில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்படுகின்றனர். மேலதிக தொடர்புகளுக்கு 077, 316 9301 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# யாழில் கடும் காற்றுடன் மழை: வீடுகள் சேதம், 12 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணத்தில் வீசிய பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், வேலணை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இதேபோல உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மேலும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அங்கும் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இதேவேளை திடீரென வீசிய கடும் காற்றால் செல்வச் சந்நிதி ஆலயத் திருவிழாவுக்காக அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கடைகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. இதனால் வியாபாரிகள் மிகுந்த சிரமத்தை எதிர்கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்படமாட்டார் ஹரிணி!

## உறுதியாக கூறுகிறார் ரில்வின் சில்வா

கொழும்பு, செப். 10

**பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது பதவியில் இருந்து நீக்கப்படுவார் என்ற ஊகங்களை மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நிராகரித்தார்.**



பொதுக் கூட்டத்தில் பேசிய சில்வா, எதிர்க்கட்சி நீண்ட காலமாக ஆதாரமற்ற கூற்றுகளைப் பரப்பி வருவதாகவும், ஆனால் அவை எதுவும் நிறைவேறவில்லை என்றும் கூறினார்.

"முன்னதாக, ஹரிணி அமரசூரிய தனது அமைச்சர் பதவியை இழப்பார் என்று அவர்கள் கூறினர்.

இப்போது அவர் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்று கூறுகின்றனர். இவை அவர்களின் கனவுகளே தவிர வேறு ஒன்றும் இல்லை" என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய 50 இல்லங்கள் அரச நிறுவனங்களுக்கு!

கொழும்பு, செப். 10

முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய 50 உத்தியோக பூர்வ இல்லங்களை எதிர்காலத்தில் அரச நிறுவனங்கள் அல்லது பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய உத்தியோகபூர்வ இல்லங்களை அரச நிறுவனங்களின் பயன்பாட்டுக்காகப் பயன்படுத்துவது குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும்



பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோர் நேற்று முன் தினம் கொழும்பில் உள்ள மலலசேகர மாவத்தை மற்றும் கெப்பட்டிபொல வீதியில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் ஒருவரின் உத்தியோகபூர்வ இல்லங்களை ஆய்வு செய்தனர்.

இதன் பின்னரே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மேற்கண்டவாறு கூறினார். (அ)

# வீதி விபத்துக்களால் 1,870 பேர் உயிரிழப்பு!

## ஜனவரி முதல் செப்ரெம்பர் வரை

கொழும்பு, செப். 10

இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் செப்ரெம்பர் 4 வரை நடந்த 1,757 வீதி விபத்துகளில் நாடு முழுவதும் மொத்தம் 1,870 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திக ஹபுகொட இந்த தகவலை வெளியிட்டார்.

வீதி விபத்துகளால் தினமும் சுமார் ஏழு முதல் எட்டு பேர் உயிரிழப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, வாகனச் சாரதிகள், பாதசாரிகள் மற்றும் பயணிகள் உட்பட அனைத்து வீதி பயனர்களும் போக்குவரத்துச் சட்டங்களை அவசியம் பின்பற்ற வேண்டும். விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்க சுய ஒழுக்கத்துடன், அவதானத்துடனும் செயல்படவேண்டும் என்றும் அவர் கூறினார். (அ)

# சந்தேகத்திற்கிடமான இரசாயனம் அறிக்கை இரண்டு நாட்களுக்குள்!

கொழும்பு, செப். 10

நாட்டின் பல பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரசாயனங்கள் குறித்த சோதனை அறிக்கை அடுத்த இரண்டு நாட்களுக்குள் வழங்கப்படும் என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

தொடர்புடைய பொருட்களின் மாதிரிகளைச் சோதிக்கும் பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் இந்திக வன்னிநாயக்க தெரிவித்தார்.

இந்தோனேசியாவில் அண்மையில் கைது செய்யப்பட்ட ஒரு குற்றக் கும்பலின் உறுப்பினர்களால் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில், மீதெனிய பகுதியில் உள்ள ஒரு நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு தொகை இரசாயனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து, கடந்த ஞாயிறு தங்காலை பகுதியில் உள்ள ஒரு நிலத்தில் இதேபோன்ற பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மேலும் நேற்று முன்தினம் கந்தானை பகுதியிலும் இதே போன்ற பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த பொருட்களின் மாதிரிகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதாகவும், சோதனை விரைவில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்குமாறு கோரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போராட்டம்!

கொழும்பு, செப். 10

தங்களை உடனடியாக ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்குமாறு வலியுறுத்தி, அகில இலங்கை பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கப் பிரதிநிதிகள், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக தொடர்ந்தும் எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஜனாதிபதியைச் சந்திக்கும் நோக்கில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக உள்ள வீதிகளில் காத்திருந்தனர்.

இந்த நிலையில், தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்குப் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்காக நடத்தப்படவிருந்த போட்டிப் பரீட்சையை இடைநிறுத்தி உத்தரவிடுமாறு கோரி, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த போட்டிப் பரீட்சையை எதிர்காலத்தில் நடத்துவதற்கான இயலுமை உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதன்போது, தொழில் கோரும் பட்டதாரிகளும் விண்ணப்பிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# மின் கட்டண திருத்தம் குறித்த பரிந்துரை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம்!

கொழும்பு, செப். 10

எதிர்வரும் மூன்று மாதங்களுக்கான மின்சார கட்டண திருத்தம் தொடர்பான பரிந்துரை, இலங்கை மின்சார சபையினால், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 12 ஆம் திகதி இறுதியாக மின்சார கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 15 வீதத்தினால் கட்டணத் திருத்தம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில், மீண்டும் மின்சார கட்டண அதிகரிப்பை மேற்கொள்வதற்கு, இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. (அ)

ஜனாதிபதிகளின் உரித்துரிமை நீக்கம்:

# சாதாரண பெரும்பான்மையுடன் சட்டமூலத்தை நிறைவேற்றலாம்!

கொழும்பு, செப். 10

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட "ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் நீக்குதல்" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, இச்சட்டமூலம் அரசியலமைப்பின் எந்தவொரு உறுப்புரையுடனும் முரண்படவில்லை என்றும் பாராளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படலாம் எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

மேலும், அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையில் கூறப்பட்ட கட்டாய விதிகளை பின்பற்றி, நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை தொடர்புபடுத்த மனுதாரர் தவறியதால், இந்த சட்டமூலம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளதாகவும் சபாநாயகர் மேலும் அறிவித்தார். (அ)

# ரொஹான் ஒலுகலவுக்கு புதிய பதவி

கொழும்பு, செப். 10

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற நடவடிக்கை தடுப்புப் பிரிவின் மேற்பார்வை பிரதானியாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் ஒலுகல நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தோனேசிய பொலிஸ் உதவியுடன் ஐந்து திட்டமிடப்பட்ட குற்றக்குழு உறுப்பினர்களை ஜகார்த்தாவில் வைத்து கைது செய்யும் நடவடிக்கையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் ஒலுகல முக்கிய பங்கு வகித்திருந்ததாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளராகவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் ஒலுகல கடமையாற்றுகின்றார். (அ)

# முஸ்லிம்களின் பிரச்சனைகளை தீர்க்க சவூதி அரசின் ஒத்துழைப்பு அவசியம்!

## ஹிஸ்புல்லா வலியுறுத்தல்

கொழும்பு, செப். 10



இலங்கையில் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் அனைத்து பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு சவூதி அரசின் ஒத்துழைப்பு அவசியம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானியுடனான சந்திப்பின் போது, அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.


அத்துடன், ஹஜ் யாத்திரைக்கான கோட்டா அதிகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் கோரியுள்ளார்.

ஆண்டு தோறும் ரமழான் காலங்களில் இலங்கைக்கு வழங்கப்படும் பேரீச்சம்பழங்களின் அளவை அதிகரிக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதனிடையே, இலங்கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தன்னால் இயலுமான வரையில் தொடர்ந்தும் முன்னெடுத்துவருவதாக இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் உறுதியளித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர நியமனம் கோரி கவனவீர்ப்பு போராட்டம்



மட்டக்களப்பு, செப். 10

மட்டக்களப்பில் பாடசாலைகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகப் பணியாற்றி வரும் பட்டதாரிகள், நிரந்தர ஆசிரியர் நியமனம் கோரி நேற்று முன்தினம் காந்தி பூங்காவின் முன்பு கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பட்டதாரிகளுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒன்றியம் இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இதனையடுத்து, நேற்று முன்தினம் காலை 09.00 மணியளவில் காந்தி பூங்காவில் ஒன்று திரண்ட நூற்றுக்கணக்கான பட்டதாரிகள், "பட்டம் பெற்ற எங்களை ஏன் மட்டமாக நடத்துகிறீர்கள்?", "பயிற்சி பரீட்சை மட்டும் தான் தகுதியா?", "நாங்கள் கற்பித்து பெறுபேறு வரவில்லையா?", "ஒரே பணி, ஒரே அங்கீகாரம், ஆசிரியர் நியமனம் வேண்டும்", "எங்கள் உழைப்பை மதியுங்கள், உரிமையை வழங்குங்கள்", "அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அல்ல, ஆசிரியர்களாகவே அங்கீகரிக்கவும்", "எங்கள் விடயத்தில் இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதியைப் பெற்றுத்தருமா அரசு?", "எங்களுக்கு ஆசிரியர் நிரந்தர நியமனத்தை வழங்குங்கள" போன்ற பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு சுமார் ஒரு மணி நேரம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# புதிய வகுப்பறை கட்டடம் ஆளுநரால் திறந்துவைப்பு

திருக்கோவில், செப். 10


எட்டு மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட புதிய வகுப்பறை கட்டடம் ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில் கல்வி வலய விநாயகபுரம் கனிஷ்ட கல்லூரியில் இரண்டு மாடிக் கட்டடத்தின் இரண்டாவது மாடியின் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்து, கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இதில் ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் உள்ளிட்ட துறை சார் அதிகாரிகள் பங்கேற்றனர். (எ)



# மட்டக்களப்பு - தாந்தாமலையில் கோடா பரல்களுடன் ஒருவர் கைது



மட்டக்களப்பு, செப். 10

மட்டக்களப்பு - தாந்தாமலை, கண்டியநாறு பகுதியை அண்டிய குளத்தருகில் மறைத்து வைக்கப்பட்ட கோடா பரல்களுடன் சந்தேக நபர் ஒருவரை கொக்கட்டிச்சோலை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய கொக்கட்டிச்சோலை பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது குறித்த நபர் சுற்றிவளைக்கப்பட்டார்.

இதன்போது 18 லீற்றர் அளவுடைய ஒரு பரலுடன், உன்னிச்சை பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

மேலும், 10 கோடா பரல்களும் 12 வெற்றுப் பரல்களும் கசிப்பு தயாரிக்க பயன்படுத்தப்படவிருந்த நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைதான சந்தேக நபரை கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

# சங்குமண்கண்டி பிள்ளையார் கோவிலில் தொடர் திருட்டு

## பொலிஸில் முறைப்பாடு

திருக்கோவில், செப். 10

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேசத்துக்குட்பட்ட சங்குமண்கண்டி காட்டுப் பிள்ளையார் கோவிலில் தொடராக திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரம், நீர்க்குழாய், பொங்கல் பானைகள், மண்வெட்டி போன்ற பொருட்கள் திருட்டுப் போயுள்ளன. திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து ஆலய பரிபாலன சபையின் செயலாளரும் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான வா. குணாளன் கூறுகையில்,

வரலாற்று பிரசித்தி பெற்ற சங்குமண்கண்டி கிராமத்தின் உள் வீதியில் அமைந்துள்ள காட்டுப் பிள்ளையார் ஆலயத்தின் கட்டுமானப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இது காட்டுப் பகுதியில் இருக்கிறத ஆலயம். இவ் ஆலய மடத்தில் வைக்கப்பட்டிருந்த மண்வெட்டி போன்ற பொருட்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் திருடப்பட்டுள்ளன.

இது பற்றி திருக்கோவில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம்.

இங்கிருந்த உண்டியல் கடந்த மாதம் திருடர்களால் தூக்கிச் செல்லப்பட்டிருந்து.

பிரதேசத்தில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடும் நபர்களை கண்டுபிடித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளோம் -என்றார். (எ)

# தம்பலகாமம் மருத்துவமனைக்கு பிரேத அறை உடனடியாக தேவை

தம்பலகாமம், செப். 10

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச மருத்துவமனையில் ஒரு பிரேத அறை இல்லாமல் காணப்படுகிறது. இந்தக் குறைபாடு உடனடியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என தம்பலகாமம் பிரதேச சபையின் தவிசாளர் எச். தாலிப் அலி தெரிவித்தார்.

உயிர்ச்சேதம் ஏற்பட்டு சடலத்தை பாதுகாப்பாக வைத்து விசாரணையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும் வரை அதற்கான பிரேத அறை இன்மையால் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. இதன் தேவைப்பாடு தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பேசப்பட்டுள்ளது. ஆனால், உரிய தீர்வில்லாமல் உள்ளது. இது உடனடியாக செய்து கொடுக்கப்பட வேண்டும்- என்றார். (எ-12)

# கொக்கட்டிச்சோலையில் நடைபெற்ற பாரம்பரிய சம்பிரதாய ஏர்பூட்டு விழா

மட்டக்களப்பு, செப். 10


வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை சிறீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பாரம்பரிய ஏர்பூட்டு விழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை விழாக்குழுத் தலைவர் க. சிவகுருநாதன் தலைமையில் பாரம்பரிய சம்பிரதாய முறைப்படி கோலாகலமாக நடைபெற்றது.


ஆலய பிரதம குரு சிவசிறீ மு. கு. சச்சிதானந்த குருக்கள், ஆலய குரு சிவசிறீ வ. ஜோதிலிங்க குருக்கள் ஆசியோடு இந்த நிகழ்வு ஆலய காணியில் ஆரம்பமானது.

இதில், விருந்தினர்களாக மண்முனை தென்மேற்கு உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன், பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர் இ. திரேசகுமாரன், பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். கலியுகராஜ், கலாசார உத்தியோகத்தர் சு. ருபேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலய பரிபாலன சபையின் வண்ணக்கர்களான தலைவர் இ. மேகராசா, செயலாளர் சி. கங்காதரன், பொருளாளர் ச. கோகுலகிருஷ்ணன் ஆகியோர் ஏர்பூட்டு விழாவை சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வில் பட்டிப்பளை பிரதேச முன்னாள் தவிசாளர் அதிபர் சிவ. அகிலேஸ்வரன் உள்ளிட்ட பிரமுகர்களும் விவசாயப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (எ-08)





# விசேட கூட்டுப் பிரார்த்தனை

லிந்துல, செப். 10

நாட்டை உலுக்கிய எல்ல வெல்லவாய பேருந்து விபத்தில் உயிரிழந்த உறவுகளின் ஆத்ம சாந்திக்காகவும் விபத்தில் காயமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் உறவுகள் விரைவில் குணமடைய வேண்டியும் கடந்த 7 ஆம் திகதி விசேட கூட்டுப் பிரார்த்தனை நுவரெலியா லிந்துல, சென்றகிலாஸ் தோட்டத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தோட்ட பொதுமக்கள், இளைஞர்கள், அறநெறிப் பாடசாலை மாணவர்கள் உட்பட பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது உயிரிழந்த உறவுகளுக்கு விளக்கேற்றி, மெழுகுவர்த்தி கொளுத்தி, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி...

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரிடம் கேள்வி எழுப்பி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காணி உறுதிகளை வழங்க முடியாவிட்டால் தற்காலிகமாக வழங்கப்பட்ட உறுதிப் பத்திரங்களையாவது வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கு 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ள நிலையில் 12 ஆயிரத்திற்கும் அதிகமான காணிகள் உள்ள நிலையில் அவர்களுக்கான காணி உறுதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்? அதன்படி முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனப் பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க, கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே 1850 உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 477 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அதன்படி அந்த விண்ணப்பங்கள் ஏற்றவாறு காலை உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (அ)

## சட்டவிரோத...

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சின் ஆலோசனைக்குழு கூட்டத்திலேயே இந்த விடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ரவிகரன் கருத்து தெரிவிக்கையில்-

கடந்த கடற்றொழில் அமைச்சின் ஆலோசனைக்குழுக்கூட்டத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்களின் முன்னேற்றம் தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தேன்.

குறிப்பாக, இந்திய மீனவர்கள் வடமாகாணக் கடற்பரப்பில் அத்துமீறி உள்நுழைந்து சுமார் 18 வகையான சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி இலங்கைக்குரிய கடல்வளத்தை அழிப்பதுடன், எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை சூறையாடி செல்கின்றனர். அத்தோடு சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களால் சட்டத்திற்குட்பட்டு கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று கூறியிருந்தேன்.

இந்த விடயங்களின் முன்னேற்ற நிலை தொடர்பிலேயே இதன்போது கேள்வி எழுப்பியிருந்தேன். அந்தவகையில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைவதைக் கட்டுப்படுத்துவதிலும், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதிலும் தாம் கூடுதல் கரிசனையுடன் செயற்படுவதாக கடற்றொழில் அமைச்சர், கடற்றொழில் பிரதி அமைச்சர் ஆகியோரால் இதன்போது பதில் வழங்கப்பட்டது.

மேலும் எதிர்வரும் டிசெம்பர் இறுதி பகுதிக்குள் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை முற்றாக கட்டுப்படுத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டதுடன், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கடற்படையினருடனும், பொலிஸாருடனும் தாம பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பதாகவும் கடற்றொ ழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகராலும், கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகேவினாலும் பதிலளிக்கப்பட்டது.

அவர்களின் இக்கருத்து களுக்கு நன்றி தெரிவித்தேன். அத்தோடு சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் என்னும் போது வெளிச்சம்பாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்குவலை, வெடிவைத்து மீன்பிடித்தல் உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களால்தான் பாரம்பரிய கரைவலைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் பாதிக்கப்படு கின்றனர். சிறுதொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்ற விடயங்களையும் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தேன் -என்றார். (அ)

## உலக வங்கியிடம்...

மில்லியன் அமெரிக்க டொலர் களை கடனாகப் பெற இலங்கை ஏற்பாடு செய்துள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## இலங்கை...

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் கருத்துரைத்த ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி, கடந்த காலத்தின் தொடர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வாய்ப்பு தற்போது அரசாங்கத்துக்கு கிட்டியிருப்பதாக சுட்டிக்காட்டினார். அதுமாத்திரமன்றி அவற்றை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டுக்கு செயல் வடிவம் வழங்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறத்தினார்.

அதேபோன்று நிலைமாறுகால நீதி நிலைநாட்டப்படவேண்டியதன் அவசியத்தை உணர்வதாகக் குறிப்பிட்ட ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி, அரசாங்கத்தினால் ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலக யோசனை வரவேற்பதாகத் தெரிவித்தார்.

இருப்பினும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளடங்கலாகக் கடந்த கால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் பின்னடைவுகள் காணப்படுவதாகவும் அவர் அதிருப்தி வெளியிட்டார்.

அதேவேளை பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டுவருவதாகக் குறிப்பிட்ட அவர், அச்சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் புதிதாக உருவாக்கப்படும் சட்டம் சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவாறு அமைய வேண்டியது அவசியம் என வலியுறுத்தியதுடன் பொறுப்புக்கூறலே சட்டவாட்சியின் மையப்புள்ளியாக அமையும் என்றும் குறிப்பிட்டார். (அ)

## ஐ. நா. ...

பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. தொடக்க அமர்வில் ஆணையாளர் வோல்கர் டேர்க்கினால் இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அறிக்கை மீதான விவாதம் நடைபெற்றது.

அங்கு கருத்து வெளியிட்ட லாவோஸ், பாகிஸ்தான், எரித்ரியா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்கு ஆதரவாகக் கருத்துரைத்தனர்.

குறிப்பாக கடந்த கூட்டத்தொடரில் 57/1 தீர்மானத்தை இலங்கை நிராகரித்திருந்தபோதிலும், ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கை நாட்டுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டமை தொடர்பில் அவர்கள் பாராட்டு வெளியிட்டனர்.

அதேவேளை ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது பக்கச்சார்பின்றி நியாயத்துவத்தின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என வலியுறுத்திய அந்நாடுகளின் பிரதிநிதிகள், இலங்கையின் உள்ளக செயன்முறைகளைத் தாம் ஆதரிப்பதாகவும் அறிவித்தனர்.

அதேபோன்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம் சம்பந்தப்பட்ட நாட்டின் ஒப்புதலின்றி முன்னெடுக்கப்படுவதாகவும், தற்போது ஐ. நா சபை நிதிப்பற்றாக்குறைக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில், இந்நிதியை வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தமுடியும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (அ)

## ஹெரோயின்...

ஐஸ் போதைப்பொருளுடனும் 18 , 22 மற்றும் 23 வயதுகளுடைய நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## வாக்கெடுப்பில்...

தீர்வு காணும் முயற்சியைத் தொடரும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஒரு நாடாக இலங்கை எந்தவொரு வெளிப்புற பொறிமுறையையும் எதிர்த்தாலும், மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் பிரச்னைகளை கையாள்வதில் சர்வதேச சமூகத்தின் தொழில்நுட்ப உதவியை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

செம்மணி மனித புதைகுழி தளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூட்டு எச்சங்கள் தொடர்பான விசாரணைகளைத் தொடர்வதில் இத்தகைய உதவி தேவைப்படலாம் என்று கருதப்படுகிறது.

முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் வரைவு இன்னும் ஜெனீவாவில் சுற்றுக்கு விடப்படவில்லை. தீர்மானத்தை முன்வைப்பதற்கு முன்னதாக, அதனுடன் நட்பு கொண்ட நாடுகளிடம், நல்லிணக்கத்தை நோக்கி அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு ஆதரவான உரைகளை நிகழ்த்துமாறு கோர இலங்கை திட்டமிட்டுள்ளது. (அ)

## இலங்கையின்...

பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் தன்னிச்சையான தடுப்புக் காவல்கள் உள்ளிட்ட அனைத்து விதமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் மனித உரிமைகள் பேரவை ஏற்கனவே ஆவணப்படுத்தியுள்ளமை தொடர்பிலும் அவர் இதன்போது நினைவுபடுத்தியுள்ளார்.

இலங்கை அதன் கடந்த காலத்திலிருந்து விடுபட்டு, பாதிக்கப்பட்டவர் கள், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களைத் தொடர்ந்து பாதிக்கும் ஆழமான வடுக்களை குணப்படுத்த இலங்கைக்கு ஒரு வாய்ப்பு காணப்படுவதாகவும் பிரித்தானியாவுக்கான நிரந்தர பிரதிநிதி குமார் ஐயர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் தீர்மானத்தை வரவேற்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மனித உரிமைகள், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், நல்லாட்சி மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம் ஆகியவற்றில் அதன் உறுதிமொழிகளை அர்த்தமுள்ள நடவடிக்கைகளாக மாற்றுமாறு இலங்கை அரசிடம் அரசாங்கத்திடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்நாட்டு நீதித்துறை செயல்முறைகளில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களிடையே நம்பிக்கையை வளர்ப்பதற்கு, நீண்டகாலத் தண்டனையிலிருந்து விடுபடுவது அவசியம் எனவும் குமார் ஐயர் வலியுறுத்தியுள்ளார்.

முழுமையான சுதந்திரமான மற்றும் பயனுள்ள பொது வழக்கறிஞர் அமைப்பை அவர் ஆதரித்துள்ளார்.

அத்துடன், ஊடகவியலாளர்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் செயல்படுவதும் மிக முக்கியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கையுடன் ஆக்கபூர்வமாக பணியாற்றத் தயாராக உள்ளதாகவும் ஐக்கிய நாடுகளுக்கான பிரித்தானியாவின் நிரந்தர பிரதிநிதி குமார் ஐயர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ)

## கே. பி. குறித்து...

வரவழைத்தே கலந்துரையாடினார். எனவே, அவர் வசம் இருந்த புலிகளின் பணம், கப்பல்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு ராஜபக்ஷக்களும் பொறுப்பு கூறவேண்டும் எனவும் பொன்சேகா கூறினார்.

“கே.பியை மலேசிய பொலிஸாரே கைது செய்தனர். அதுபற்றி நாம் அறிந்திருக்கவில்லை. இலங்கையால் தேடப்படும் நபரொருவர் எம்மிடம் உள்ளார். குழுவொன்றை அனுப்பினால் ஒப்படைக்கலாம் என மலேசியாவில் இருந்து எமக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதற்கமைய நால்வரடங்கிய சி.ஐ.டி குழு அங்கு சென்றது. அக்குழுவுடன் மலேசியாவில் இருந்தும் குழுவொன்றும் வந்தது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய பின்னரே , கைது செய்யப்பட்டவர் கே.பி. என்ற தகவலை அவர்கள் வெளியிட்டனர்.” எனவும் பொன்சேகா குறிப்பிட்டார்.

கோட்டாபய என்ன செய்தார்? 24 மணிநேரத்துக்குள் கே.பியை வீட்டுக்கு அழைத்தார். தனியாக பேச்சு நடத்தினார். அப்போது கே.பி. வசம்தான் புலிகளின் நிதி, கப்பல்கள் இருந்தன. ஒரு மாதத்துக்கு பின்னர் கே.பி. விடுவிக்கப்பட்டார். அப்போது நான் இராணுவத்தில் இருக்கவில்லை.

கே.பி. வசம் இருந்த பணத்துக்கு என்ன நடந்தது, அவை அரசுடமையாக்கப்படவில்லை. கே.பியுடன் ராஜபக்ஷக்கள்தான் கலந்துரையாடினார்கள். என்ன நடந்தது என்பது அவர்களுக்குதான் தெரியும். எனவே, இதற்கு பொறுப்பு கூறவேண்டும்.” - எனவும் பொன்சேகா குறிப்பிட்டார். (அ)

## அர்த்தமுள்ள...

உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஜெனீவாவில் ஆரம்பமானது. தொடக்க அமர்வில் ஆணையாளர் வோல்கர் டேர்க்கினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கை மீதான விவாதத்தில் கருத்துரைத்த இந்தியப் பிரதிநிதி, 2009 ஆம் ஆண்டு இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் நாட்டைக் மீளக்கட்டியெழுப்புவதற்கும், மக்களை மீள்குடியமர்த்துவதற்கும் இந்தியா தொடர்ந்து ஆதரவு வழங்கி வந்ததாக சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று 2022 ஆம் ஆண்டு இலங்கை மிகத்தீவிர பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த வேளையில் இந்தியாவினால் வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பில் நினைவு கூர்ந்த அவர், 2024 இல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டமையும், 2025 ஏப்ரலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டமையும் இருநாடுகளுக்கும் இடையிலான வலுவான இரு தரப்பு நல்லுறவைக் காண்பிப்பதாகக் குறிப்பிட்டார்.

அதேவேளை, இலங்கையின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையுடன் தமிழ்மக்களின் அபிலாஷைகளான சமத்துவம், நீதி மற்றும் கௌரவத்தை இந்தியா எப்போதும் வலியுறுத்திவருவதாகத் தெரிவித்த அவர், நாட்டின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும், மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துமாறும், அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்துவதாகக் கூறினார்.

அத்தோடு சகல தரப்பினரையும் உள்ளடகிய அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு மற்றும் நியாயமான நல்லிணக்க செயன்முறை என்பன நிலையான அமைதிக்கு வழிகோலும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பாதாள கும்பல்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் விவரம் விரைவில்!

## பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க திட்டம்!

கொழும்பு, செப். 10

**பாதாள உலக கும்பல்களுடன் தொடர்புகளை பேணி வந்த அரசியல்வாதிகள், முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியலை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

பாதாள உலகக் கும்பல்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து கடந்த சில நாட்களாக கடுமையான விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாதாளக் உலக கும்பல்களுடன் தொடர்புகளை பேணி வந்த அரசியல்வாதிகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளார்.

இந்தோனேசியாவில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் இந்தோனேசிய பொலிஸாரால் 7 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது கெஹெல்பத்தர பத்மே, கொமாண்டோ சலிந்த மற்றும் பாணந்துறை நிலங்க உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலக கும்பல் ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்து பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரயில் தடம் புரண்டது

கொழும்பு, செப். 10

களனிவெளி மார்க்கத்தில் இயங்கும் ரயில் சேவைகள் கொஸ்கம ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து அவிசாவளை நோக்கிச் சென்ற ரயில் ஒன்று புவக்பிட்டியவுக்கும், அவிசாவளைக்கும் இடையிலான பகுதியில் தடம்புரண்டது.

இதன் காரணமாக, தடம்புரண்ட ரயிலை வழித்தடமேற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# 2026 ஒதுக்கீட்டு சட்டமூல வரைவை சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, செப். 10

2026 நிதியாண்டுக்கான வரைவு ஒதுக்கீட்டு சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட்டு, ஒப்புதலுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2026 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை தயாரிப்பதற்கு கடந்த ஜூலை முதலாம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2026 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூல வரைவுக்கு சட்டமா அதிபரின் ஒப்பதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த நிலையில் குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# பயத்தின் உச்சத்தில் நாமல் ராஜபக்ஷ எம். பி.

## பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன

கொழும்பு, செப். 10

ஊடகவியலாளர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உச்ச பயத்தில் இருப்பதாகவும் எனவே அவரது முகபாவனையை கவனிக்குமாறும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

அவரது உரையின்போது, கமெரா அவரைக் காட்டும் போது, அவர் வியர்த்துக்கொண்டிருப்பதையும், அவரது கண்களில் பயம் வெளிப்படுவதையும் நீங்கள் காணலாம். அந்த முகபாவங்கள் இருந்தபோதிலும், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் தான் பயப்படவில்லை என்று தெரிவிக்கிறார் என்று கருணாரத்ன நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

மேலும் சமீபத்திய சம்பவங்கள் தொடர்பாக பல பிரச்னைகள் வெளிப்படுவதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நாடு போதைப்பொருள் கடத்தலில் தொடர்ந்து முன்னேறினால், நமது குழந்தைகளின் எதிர்காலம் அழிக்கப்படும் என்று அவர் எச்சரித்தார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஒருவரின் பதவிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கைதுகள் பல சட்டவிரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# 2026ஆம் ஆண்டுக்கான பாடப் புத்தகம் அச்சிடுவதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, செப். 10

2026 ஆம் ஆண்டுக்கான பாடசாலைப் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

366 பாடப் புத்தகங்களுக்கான 27.12 மில்லியன் பிரதிகள் அச்சிடப்படவேண்டியுள்ளது.

அதற்கமைய, தேசிய போட்டி விலை மனு முறைமையைக் கடைப்பிடித்து விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 29 நிறுவனங்கள் விலை மனுக்களைச் சமர்ப்பித்துள்ளன.

உயர்மட்ட பெருகைக் குழுவின் விதந்துரைகளுக்கமைய, 3,491.47 மில்லியன் ரூபாய் செலவில் குறித்த 29 நிறுவனங்கள் மூலம் 366 பாடப் புத்தகங்களின் 25.49 மில்லியன் பிரதிகளை அச்சிடுவதற்குப் பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# 100 கிலோமீற்றருக்கு அதிகமான தூரம் பயணிக்கும் பஸ்களில் பரிசோதனை!

## தினந்தோறும் நடத்துவதற்கு போக்குவரத்து ஆணைக்குழு திட்டம்

கொழும்பு, செப். 10

நீண்ட தூரம் பயணிக்கும் பஸ்களை தினந்தோறும் பரிசோதனைக்கு உட்படுத்த திட்டமிட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, 100 கிலோ மீற்றருக்கு அதிகமான தூர பிரதேசங்களுக்கு பயணிக்கும் பஸ்கள் தினந்தோறும் பரிசோதனைக்குட்படுத்த திட்டமிட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுத் தலைவர் பொறியாளர் பி.ஏ.சந்திரபால தெரிவித்துள்ளார்.

நீண்ட தூரம் பயணிக்கும் பஸ்களால் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# மருந்து கொள்வனவில் செயன்முறை சிக்கல்!

## அதனால் மருந்து பொருட்கள் தட்டுப்பாடு என்கிறார் சுகாதார அமைச்சர் நளிந்த

கொழும்பு, செப். 10

ஒரு குறிப்பிட்ட வைத்தியசாலையில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு பற்றாக்குறை ஏற்படுமாயின் அது, நிதி பற்றாக்குறையால் ஏற்பட்ட தட்டுப்பாடு அல்ல, மாறாக அவற்றை கொள்முதல் செய்வதில் ஏற்பட்டும் செயன்முறை சிக்கல் காரணமாகவே மருந்துகளுக்கும் மருத்துவ உபகரங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படுகிறது என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பல் அறுவைச் சிகிச்சை வைத்தியர்களுக்கான வரையறுக்கப்பட்ட வழிமுறைப் பயிற்சிக்காக சுகாதார அமைச்சால் 86 பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேற்படி பல் மருத்துவ பட்டதாரிகளை வரையறுக்கப்பட்ட வழிமுறைப் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கொழும்பில் உள்ள ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர்-

இந்த நாட்டு மக்களின் சுகாதார சேவைகளை மேம்படுத்த ஒவ்வொரு துறையையூம் அறிவியல் ரீதியாகவும், முறையாகவும் நிறுவகிக்க அவசியமான திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு முதல் பல பல் அறுவைச் சிகிச்சை பட்டதாரிகள் வரையறுக்கப்பட்ட வழிமுறைப் பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். பயிற்ச்சியை நிறைவு செய்தவர்களுக்கு உடனடியாக



நியமனங்களை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

சுகாதார சேவைக்கான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வித தாமதமும் இன்றி வழங்கப்படும் என உறுதியளிக்கிறேன். ஒரு குறிப்பிட்ட வைத்தியசாலையில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு பற்றாக்குறை ஏற்படுமாயின் அது, நிதி பற்றாக்குறையால் ஏற்பட்ட தட்டுபாடு அல்ல மாறாக அவற்றை கொள்வனவு செய்வதில் ஏற்பட்டும் செயன்முறை சிக்கல் காரணமாகவே மருந்துகளுக்கும் உபகரங்களுக்கும் பற்றாக்குறை ஏற்படுகிறது-என்றார். (அ)

# ஜனாதிபதி கச்சதீவு சென்று பயனில்லை

## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு




கொழும்பு, செப். 10

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கச்சதீவுக்கு சென்று பயனில்லை என்றும் அவர் அறுகம்பை மற்றும் வெலிகம பகுதிகளுக்கே செல்ல வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி கச்சதீவு சென்று பயனில்லை. விஜய் சொன்னார் என்பதற்காக கச்சதீவை இந்தியாவுக்கு கைப்பற்ற முடியாது. நாம் எல்லோருக்கும் தெரியும் கச்சதீவு விவகாரத்தை கையாள்வது இந்திய மத்திய அரசாங்கம் என்று. விஜய் அல்ல அவரை விட பெரிய தலைவர்களான எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, கருணாநிதி போன்றோருக்கே கச்சதீவு விகாரத்தில் ஒன்றும் செய்ய முடியாமல் போனது. எனவே அரசியல் நாடகம் ஆடாமல் பிரச்னைகளுக்கு தீர்வு தாருங்கள்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org